குறித்து *5* ஆம் தேதி நடைபெறவிருக்கும் மானியக் கோரிக்கையில் விளக்கமாகக் குறிப்பிட இருக்கிறேன். எனவே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டுள்ளது பற்றி துறை பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. தகவல் கோரல்

(அ) சென்னை, நந்தனத்திலுள்ள தேவர் சிலைக்கு சேதம் ஏற்படுத்த நடந்த முயற்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. கே.ஏ. செங்கோட்டையன்.*

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று இரவு சென்னை, நந்தனத்திலுள்ள தேவர் பெருமகனார் சிலையை 50—க்கும் மேற்பட்டவர்கள் தாக்க முயற்சி மேற்கொள்ளுகிறபோது, காவல் துறையினர் அவர்களைக் கைது செய்து காவல் நிலையத்தில் வைத்துள்ளார்கள். இதுபோன்று தேசியத் தலைவர்களுடைய சிலைகளை, சில தீய சக்திகளின் ஊடுருவல் காரணமாகத் தாக்குவதைத் தடுக்க நடவடிக்கை மேற்கொள்வதோடு, கடுமையான தண்டனைகள் என்ற அடிப்படையில் பல்வேறு தண்டனைகள் வழங்கப்படுவதோடு, தேசியத் தலைவர்களுடைய சிலைகளுக்கு முழுப் பாதுகாப்பு அளிப்பதற்கு இந்த அரசு முன்வரவேண்டுமென்று உங்கள்மூலம் வலியுறுத்தி, அமர்கிறேன்.*

(ஆ) மகாபலிபுரம், வன்னியர் இளைஞர் பெருவிழாவிற்கு வந்தவர்கள் வழிமறித்துத் தாக்கப்பட்டது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.*

2010 ஏப்ரல் 30]

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த இரு தினங்களுக்கு முன்பாக, மகாபலிபுரத்தில் சுமார் பத்து இலட்சத்திற்கும் மேற்பட்ட இளைஞர்களைத் திரட்டி, சாதிவாரிக் கணக்கெடுப்பு நடத்தி, இட ஒதுக்கீட்டை வழங்கவேண்டும் என்பதற்காக எங்கள் தமிழினப் போராளி மருத்துவர் அய்யா அவர்கள் நடத்திய அந்த வன்னியர் இளைஞர் பெருவிழா மாநாட்டில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையை ஏற்று, தமிழகக் காவல் துறையின் ஒரு D.I.G. தலைமையில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட காவலர்கள் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டு, அந்த மாநாடு மிகச் சிறப்பாக, அந்த மாநாடு நடைபெற்ற இடத்தில் எந்தவித ஒரு அசம்பாவிதமும் இல்லாமல் பாட்டாளி மக்கள் கட்சியினுடைய தொண்டர் படையின் துணையோடு நிறைவேறியது.

ஆனால், அந்த மாநாட்டில் கலந்துகொள்ள, கடலூரிலிருந்து கிழக்குக் கடற்கரைச் சாலை வழியாக வந்த ஆயிரக்கணக்கான வண்டிகள், 52 கிலோ மீட்டருக்கு நெருக்கடியில் traffic jam ஏற்பட்டு நின்றிருந்தன. அப்போது, கடப்பாக்கம், பூஞ்சேரி, மரக்காணம், எல்லையம்மன்கோவில், இதுபோன்ற பகுதிகளிலிருந்து திடீரென்று வந்த ஒரு வன்முறைக் கும்பல் அந்த வண்டிகளைச் சரமாரியாக அடித்து நொறுக்கி, டயர்களைக் கிழித்து வன்முறைக் களியாட்டம் ஆடியது. அப்போது, அந்த வண்டியிலிருந்த பொது மக்களும், பாட்டாளி மக்கள் கட்சிப் பிரமுகர்களும், வன்னியர் சங்கத்தினுடைய தாய்மார்களும், வழி தெரியாமல் வீதிகளில் ஓடியபோது, அவர்களுடைய உடைமைகள், பொருட்கள் அங்கு சூறையாடப்பட்டிருக்கின்றன. ஆக, அமைதியான முறையில் ஒரு மாநாடு நடத்துவதை—இது இப்போது மட்டும் நடைபெறவில்லை. தொடர்ந்து நாங்கள் மகாபலிபுரத்தில் எப்போது மாநாடு நடத்தினாலும், ஒரு வன்முறைக் கூட்டம் திட்டமிட்டு இதுபோன்ற காரியங்களைச் செய்து வருகிறார்கள்.

மாண்புமிகு முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களை அழைத்துத்தான் எங்கள் மருத்துவர் அய்யா அவர்கள், சாதியின் பெயராலும், மதத்தின் பெயராலும் ஒரு சொட்டு இரத்தம்கூட சிந்தக்கூடாது என்பதற்காக, 14 மாவட்டங்களில் சமய, சமுதாய, மத நல்லிணக்க மாநாடுகளை நடத்தி, இறுதியாக, பத்து இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்களைத் திரட்டி அரியலூரில் அந்த மாநாடு நடைபெற்றது. மாண்புமிகு முதல்வர் அவர்கள்கூட

[திரு. தி. வேல்முருகன்] [2010 ஏப்ரல் 30

கலந்துகொண்டார்கள். ஆனால், இன்றைக்கு இதுபோன்ற சம்பவத்தினால், ஒரு டயர் கிழிக்கப்பட்டு, ஒரு வண்டி பஞ்சராகி, அதைச் சரிசெய்ய மாநாட்டிற்கு வந்தவர்கள் இறங்கி வேலை செய்துகொண்டிருந்தபோது, பின்னால் இருந்த ஒரு லாரி மோதி . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வேல்முருகன், சுருக்கமாகச் சொல்லுங்கள்.

திரு. தி. வேல்முருகன்: சொல்கிறேன். இது மிகவும் முக்கியமான பிரச்சினை. எங்கள் தலைவர் உள்ளிட்ட 18 சட்டப் பேரவை உறுப்பினர்களும் அவையை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பாக தங்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தோம். இது மிகவும் sensitive ஆன பிரச்சினை என்பதற்காக, தயவுசெய்து மாண்புமிகு . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கவனத்தை ஈர்த்தாயிற்று, உட்காருங்கள். (குறுக்கீடு) சீக்கிரம் சொல்லி முடியுங்கள்.

முற்பகல் 10–30

திரு. தி. வேல்முருகன்: விவரங்களைச் சொல்ல வேண்டும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2 பேருக்கு அந்த விபத்திலே காயம் ஏற்பட்டு, எலும்பு முறிவு ஏற்பட்டு, செங்கல்பட்டு மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதோடு, கடலூரைச் சேர்ந்த இராஜேந்திரன் என்கிற 45 வயது இளைஞர், இச்சம்பவத்தில் கல் வீசப்பட்டதால் நெஞ்சில் அடிபட்டு, வீட்டிற்குச் சென்றவர், அவர் வீட்டில் மின் சாதனத்தில் வேலை செய்தபோது, மின்சாரத்தால் அதிர்வு ஏற்பட்டும், ஏற்கெனவே நடைபெற்ற இந்தத் தாக்குதலால் நெஞ்சில் காயம் ஏற்பட்ட காரணத்தினால் அவர் நேற்று இறந்திருக்கிறார். ஆக, இதுபோன்ற ஒரு சம்பவம் நடந்தேறியிருக்கின்றது. ஆதலால், தமிழக முதலமைச்சர் அவர்கள் இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறாமல் இருப்பதற்கு, எதிர்வரும் காலத்தில் தகுந்த பாதுகாப்பு அளிக்க வேண்டும். பத்துக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்து, மண்டையுடைந்து, கை, கால் உடைந்து, மருத்துவமனையிலே சிகிச்சை பெற்று வருகிறார்கள். அவர்கள் குடும்பங்களுக்கு உதவி வழங்கவும், எந்தவிதத்தில் இறந்திருந்தாலும்,

2010 ஏப்ரல் 30] [திரு. தி. வேல்முருகன்]

அது மின்சாரம் தாக்கி இறந்திருந்தாலும், இவர்கள் தாக்கிய அந்தக் காயத்தின் காரணமாக, கடலூர் இராஜேந்திரன் இறந்ததாலும், அவருடைய குடும்பத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 5 இலட்சம் ரூபாய் நிவாரணம் வழங்குவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

S.C., S.T.களுக்கான சட்டம் என்பது தவறாகப் பயன்படுத்தப்படுகிறது. குறிப்பாக, மேட்டூரில் எங்கள் கட்சியின் தலைவர்மீதே வழக்குப் பதிவு செய்யப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்ட பிறகு, அந்த வழக்கு திரும்பப் பெறப்படுகிறது. இதிலேகூட ஒரு சில சமூக விரோதக் கும்பல், ஒரு இரு சக்கர வாகனத்தைத் தாங்களாகவே கொளுத்திக்கொண்டு, அதன்மூலமாக அந்தக் கலவரத்தை எழுப்பி, அதில் ஒரு அரசியல் இலாபம் தேடுவதற்கு முயற்சித்திருக்கிறது என்கிற செய்தியும் தெரிய வருகிறது. அதனால் காயம்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும். அமைதியாக நடந்த அந்த மாபெரும் மக்கள் எழுச்சி மாநாட்டில் ஊறுவிளைவிப்பிதற்கும், கலகம் செய்வதற்கும் முற்பட்ட அந்தக் கும்பலை இதுவரையிலும் காவல் துறை கைது செய்யவில்லை என்பது வருத்தத்திற்குரிய செய்தியாக இருக்கிறது. ஆதலால் இந்த அவையின் கவனத்தை ஈர்த்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், மேலும் இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறாத வண்ணம் தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்யக் கேட்டுக்கொள்கிறேன். பாதுகாப்பாக இந்த மாநாடு நடைபெற காவலர்களை அனுப்பி எல்லாவிதத்திலும் ஒத்துழைத்தமைக்கு நன்றி கூறுகிற அதே வேளையில், இவர்களுக்குத் தகுந்த நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தி. வேல்முருகன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. சி. ஞானசேகரன், நீங்கள் விதி 55–ன்கீழ் ஓர் அறிவிப்புக் கொடுத்து, அது நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்டிருக்கிறது. அதை எடுத்துக்கொள்ளலாம், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. போ. கோபாலன், சொல்லுங்கள். (குறுக்கீடு) திரு. சி. ஞானசேகரன், உட்காருங்கள்.